<u>**DEPOSITION OF WITNESS**</u>

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | CC 416/ 2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W1 |
| Name | : | குமார் என்கிற கிருஷ்ணகுமார் |
| Father Name | : | தங்கராசு |
| Village | : | அரசனூர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Calling | : | டைல்ஸ் ஒட்டும் வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 32 |
| ACCUSED | சடையப்பன் ஆஜர். | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.09.2025

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் தற்போது அரசனூரில் குடியிருந்து வருகிறேன். நான் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் முருகேசனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி சடையப்பனை எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன சரவணன், இராஜேஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 03.09.2017-ஆம் தேதி இரவு 7.15 மணிக்கு நானும் முருகேசனும் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட முருகேசன் பின்னால் அமர்ந்து கொண்டு பெரம்பலூரிலிருந்து ரங்கநாதபுரத்திற்கு சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தில் இராஜேஷ் வாகனத்தை ஓட்ட சரவணன் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். இராஜேஷ் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவெண் TN 46 K 7301 TVS. நாங்கள் ஆதரவற்ற குழந்தைகள் பள்ளி அருகே சென்று கொண்டிருந்த போது எதிர்ப்புறத்தில் லோடு ஆட்டோவை ஆஜர் எதிரி தாறுமாறாக ஓட்டி வந்து எங்களுக்கு

முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். அவ்வாறு மோதியதில் சரவணனுக்கு தலையில்அடிப்பட்டு மூளை சிதறி வெளியில் வந்துவிட்டது. சரவணன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இராஜேஷ் தலையில் அடிப்பட்டுவிட்டது. அருகில் இருந்தவர்கள் சரவணனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர். மேற்படி ஆட்டோ எங்களின் மீதும் மோத வந்ததில் நாங்கள் தப்பித்துவிட்டோம். அதன் பின்னர் இராஜேஷிற்கு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சொன்னார்கள். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்போது மேற்படி இராஜேஷ் இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து சம்மந்தமாக முருகேசன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த விபத்திற்கு எதிரிதான்காரணம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>

போலீசார் வழக்கு சம்மந்தமாக 04.09.2017–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் பெரம்பலூர்அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தனர். எந்த அதிகாரி என்னை விசாரித்தார் என்று எனக்கு தெரியவில்லை. அதன் பிறகு சுமார் 10 நாட்கள் கழித்து போலீசார் மீண்டும் என்னை விசாரித்தனர். நான் தற்போது சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்து போன சரவணன் என்னுடைய பெரியம்மா மகன் ஆவார். நான் அரசனூரில் வசித்து வருகிறேன். அரசனூரிலிருந்து நான் காலை 9.15 மணியளவில் பெரம்பலூருக்கு வேலைக்காக புறப்பட்டேன். ரோவர் ஆர்சிலிருந்து கிழக்கு பக்கம் உள்ள பால்வாடி பள்ளியில் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வந்தேன். நான் சொல்வது போல் அந்த இடத்தில் பால்வாடி பள்ளி எதுவும்

இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு அன்று மாலை 05.00 மணியளவில் வேலை முடிந்தது. வேலை முடிந்து மாலை 5.20 க்கு ரங்கநாதபுரத்திற்கு எனது பாட்டிக்கு (அம்மாயி) உடல் நிலை சரியில்லாததால் அவரைப் பார்த்துவிட்டு அவருக்கு டிபன் வாங்கி கொடுப்பதற்காக பெரம்பலூருக்கு மாலை 06.00 மணியளவில் நானும் முருகேசனும் சென்றோம். முருகேசன் என்னுடைய பெரியப்பா ஆவார். பெரம்பலூரிலிருந்து நாங்கள் மாலை 6.45 மணியளவில் ரங்கநாதபுரத்திற்கு செல்வதற்காக புறப்பட்டோம். செஞ்சேரியில் வடை சாப்பிட்டுவிட்டு இரவு 7.10-ற்கு ரங்கநாதபுரத்திற்கு புறப்பட்டோம். விபத்து ஆதரவற்ற பள்ளிக்கு எதிரில் நடைபெற்றது. விபத்து சமயத்தில் சரவணன் மேல்பகுதி ரோஸ் கலரும் கீழ்ப்பகுதியில் புளுகலரும் கொண்ட சட்டை அணிந்திருந்தார். சம்பவ இடத்தில் பள்ளியின் மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சம்பவ இடத்திற்கு போலீசார் விபத்து நடைபெற்று சுமார் அரை மணிநேரம் கழித்து வந்தனர். புகார் கொடுக்கம் பொழுது முருகேசனுடன் நானும் பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு இரவு 01.00 மணிக்கு சென்றேன். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் உண்மையில் ராஜேஷ்தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி சென்றார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் இறந்து போன சரவணன் எனதுதம்பி என்பதால் போலீசார் சொல்லி கொடுத்தன்பேரில் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது முழு பெயர் கிருஷ்ணகுமார். அதனை சுருக்கமாக குமார் என்று அழைப்பார்கள். போலீசார் விசாரணையில் என்னுடைய பெயர் குமார் என்று சொல்லியுள்ளேன். என்னுடைய பெயர்

கிருஷ்ணகுமார் என்றும் குமார் என்று என்னுடைய பெயரை மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை :– இல்லை</u>**

**ஒப்பம்/– கி. முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**